பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**30 05 2026** **6 45**

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பு கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

2. செமிகண்டக்டர் உற்பத்தியை அதிகரிப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. ஊழலற்ற நிர்வாகம் உறுதி செய்யப்படும் என்று மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான இரண்டாவது மகளிர் டிவெண்ட்டி - டிவெண்ட்டி கிரிக்கெட் போட்டி **Bristol-**ல் இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பு கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்தார்.

குஜராத் மாநிலம் புஜ் நகிர்ல் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், ஊடுருவலை தடுக்கும் வகையில், ட்ரோன், ராடார் மற்றும் நவீன வேலி அமைப்பது உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

எல்லையில் பாதுகாப்பை வலுப்படுத்துவதுடன், மக்கள் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள், சிறந்த நிர்வாகம், உள்ளூர் காவல் துறையினரின் செயல்பாடுகள், ராணுவம் ஆகியவை ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

கடந்த அறுபது ஆண்டுகளாக எல்லை பாதுகாப்புப் படையினர் நாட்டைப் பாதுகாப்பதில் திறம்பட சேவையாற்றி வருவதாக அவர் கூறினார்.

தாய்நாட்டிற்காக தங்களது இன்னுயிரை தியாகம் செய்த இரண்டாயிரத்துக்கும் அதிகமான பாதுகாப்புப் படை வீரர்களுக்கு மரியாதை செலுத்துவதாக திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<>>>>

செமிகண்டக்டர் உற்பத்திக்கான கட்டமைப்பை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

செமிகண்டக்டர் உற்பத்திக்கான மூலப்பொருட்களை தயாரிப்பதற்கான தொழில்நுட்பம் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் **Intel** மற்றும் **3 DGS** நிறுவனங்கள் கையெழுத்திட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், இந்தியாவில் செமிகண்டக்டர் உற்பத்திக்கான நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

செமிகண்டக்டர் துறையில் ஏராளமான நேடிர மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

பள்ளிக் கல்விக்கான சூழல் அமைப்பை மேம்படுத்தும் வகையில் மத்திய அரசின் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கல்வித் திட்டத்திற்கான நிதியை விடுவிப்பது மற்றும் அதன் பயன்பாடு குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மத்திய, மாநில அரசுகளின் செயல்பாடுகளை வலுப்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய கல்விக் கொள்கை 2020-ஐ திறம்பட அமல்படுத்துவதில் கவனம் செலுத்தப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

புதுமைக் கண்டுபிடிப்புகள், ஊட்டச்சத்து, திறன்மேம்பாடு, விளையாட்டு மற்றும் கலைகளில் மாணவர்களின் ஆர்வத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

<<<<>>>>

கார்பன் வெளியேற்றத்தை குறைப்பதற்காக தூத்துக்குடி துறைமுக நிர்வாகம் மேற்கொண்டு வரும் முயற்சிகள் பாராட்டத்தக்கது என்று மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சக செயலாளர் திரு. சந்தோஷ் குமார் சாரங்கி தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி துறைமுக வளாகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், பசுமை எரிசக்தி உற்பத்திக்கான முயற்சிகள் உலக அளவில் சுற்றுச்சூழல் மாற்றத்திற்கான முன்மாதிரியாக திகழ்கிறது என்று கூறினார்.

பருவநிலை மாற்றம் தொடர்பான இந்தியாவின் இலக்குகளை நிறைவேற்றுவற்கு இதுபோன்ற நடவடிக்கைகள் பெரும் உத்வேகம் அளிக்கும் என்று திரு. சந்தோஷ் குமார் சாரங்கி கூறினார்.

முன்னதாக இந்த துறைமுகத்தில் ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் டன் உற்பத்தி திறன்கொண்ட பசுமை அமோனியா ஆலை அமைப்பதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது.

<<<<>>>>

தமிழகத்தில் ஊழலற்ற ஆட்சியை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தவறுகள் மீது எவ்வித தயக்கமும் இன்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

வருவாய் துறையின் வரவு, செலவு குறித்த சரியான புள்ளி விவரங்களை அறிந்துகொள்வதற்கு ஒரு மாத கால அவகாசம் தேவைப்படுவதாக அவர் தெரிவித்தார்.

நிலப் பட்டா வழங்குவது தொடர்பான விவகாரத்தில் தவறு நடந்தால் அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு. செங்கோட்டையன் கூறினார்.

<<<<>>>>

வண்டலூர் உயிரியல் பூங்காவில் பணி முடிந்து வரும் ஊழியர்களின் கோரிக்கைகள் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று மாநில வனத்துறை அமைச்சர் திரு. ரஞ்சித் குமார் தெரிவித்துள்ளார்.

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் நேற்று ஆய்வு மேற்கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனைத் தெரிவித்தார்.

நாட்டிலேயே மிகப்பெரிய உயிரியல் பூங்காவாக உள்ள வண்டலூருக்கு ஆண்டுதோறும் 14 லட்சம் பேர் வருகை தருவதாக குறிப்பிட்டார்.

வனப் பகுதிகளில் விலங்குகளால் மனிதர்கள் தாக்கப்படுவதை தடுக்கும் வகையில் வேலிகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உயிரியல் பூங்காவை பராமரிப்பதில் உள்ள குறைபாடுகள் குறித்து பொதுமக்கள் அரசின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும் என்று திரு. ரஞ்சித்குமார் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் அடுத்த 5 நாட்களுக்கு ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே தமிழகம், புதுவை, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்று அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்க கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே தருமபுரி மாவட்டம் தீர்த்தமலை சுற்றுவட்டாரப் பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக திருவண்ணாமலை நெடுஞ்சாலையில் மின்கம்பம் விழுந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

போர்க்களத்தில் நிலவி வரும் தற்போதைய சூழல், யுக்ரைனுடனான போர் விரைவில் முடிவிற்கு வரும் என்ற நிலையில் உள்ளதாக ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

-------------

ஆன்லைன் தளங்களில் குழந்தைகளுக்கான பாதுகாப்பு, ஒழுங்குமுறை விதிகள் ஆகிய அம்சங்களில் அரசும், தொழில்நுட்ப நிறுவனங்களும் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் திரு வோல்கர் டர்க் வலியுறுத்தியுள்ளார்.

-------------

சிக்கிம் மாநிலத்தில் அமல்படுத்தப்பட்டுள்ள போக்குவரத்து மாற்றத்தால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்கள் தொடர்பான புகார்கள் குறித்த அறிக்கையை தாக்கல் செய்யுமாறு அம்மாநில உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

-------------

குஜராத் மாநிலம் கிர் வனப்பகுதியில் கடந்த வாரம் 8 சிங்கக் குட்டிகள் உயிரிழந்ததை அடுத்து வன விலங்குகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அம்மாநில அரசு முடுக்கிவிட்டுள்ளது.

-------------

தேர்வுக்கு பிந்தைய நடவடிக்கைகளுக்கான இணையதளம் ஜூன் ஒன்றாம் தேதி முதல் செயல்பாட்டுக்கு வரும் என்று மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் தெரிவித்துள்ளது.

-------------

சர்வதேச அளவில் கச்சா எண்ணெயின் விலை பீப்பாய் ஒன்றுக்கு 92 அமெரிக்க டாலராக உள்ளது.

-------------

கடலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கான குறைதீர்ப்பு நாள் கூட்டம் ஆட்சியர் திரு. ஆதித்ய செந்தில் குமார் தலைமையில் நேற்று நடைபெற்றது.

-------------

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருள்மிகு தண்டாயுதபானி திருக்கோயிலில் வைகாசி விசாக திருவிழாவின் முக்கிய நிகழ்வான திருக்கல்யாண வைபவம் நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

-------------

***விளையாட்டுச் செய்திகள்***

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான இரண்டாவது மகளிர் டிவெண்ட்டி - டிவெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

Bristol-ல் இப்போட்டி, இன்றிரவு 7 மணிக்குத் தொடங்குகிறது.

-----------

ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டியில், குஜராத் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

சண்டிகரில் நேற்று நடைபெற்ற போட்டியில், முதலில் பேட் செய்த ராஜஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 214 ரன் எடுத்தது.

215 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய குஜராத் அணி 18 புள்ளி 4 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 219 ரன் எடுத்தது.

அகமதாபாத்தில் நாளை நடைபெறும் இறுதி போட்டியில், குஜராத் அணி, பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

-----------

திருவாரூர் மாவட்டம் கட்டக்குடியில் நடைபெற்ற தேசிய அளவிலான கபடிப் போட்டியில் 43 புள்ளிகளுடன் ஹரியானா அணி வெற்றி பெற்றது.

நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் இந்த அணி கர்நாடக அணியை வென்றது.

வெற்றி பெற்ற அணிக்கு 5 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையுடன் கோப்பையும் வழங்கப்பட்டது.

--------------

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் நடைபெற்று வரும் ஹாக்கிப் போட்டியில் மும்பை மற்றும் செகந்தரபாத் அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளன.

**<<<<The End>>>>**